# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1761/8 - 2012 ජූනි 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2012.06.07

*1761/8 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண சபையின் 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கனியவள வரி நியதிச் சட்டம்*

*மேல் மாகாண மாகாண சபையில் முதல் அமைச்சரும், நிதி, திட்டமிடல், சட்டம் ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மின்சக்தி, வலு, மனிதவலு, தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கனியவள வரி நிதி நியதிச் சட்டம் தொடர்பில் மேல் மாகாண மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களின் சம்மதத்தின் பெரில் 2012.05.10 ஆந் திகதி தொடக்கம் கனியவள வரி நிதி நியதிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவரும்படி இங்கு பிரகடனப்படுத்துகின்றேன்.*

*பிரசன்ன ரணதுங்க,*<br>*முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும்,*<br>*காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம்,*<br>*மின்சக்தி, வலு, மனிதவலு, தொழில்வாய்ப்பு மற்றும் பொருளாதார*<br>*மேம்பாட்டு அமைச்சர்,*<br>*மேல் மாகாணமாகாண சபை.*

*மேல் மாகாண முதலமைச்சர் அலுவலகம்,*<br>*"சிராவஸ்தி மந்திரய",*<br>*கொழும்பு 07,*<br>*2012, யூன் 01.*

**மேல் மாகாணத்தின் 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க**<br>**கனியவள வரி நியதிச் சட்டம்**

*பாராளுமன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட சட்டத்தின் கீழேயான ஏதாவது வரையறையின் கீழ் மேற்கொள்ளலும், ஏதாவது விலக்களித்ததன் கீழே மேல் மாகாண சபையில் அமைந்துள்ள கனியவள உரிமைகளுக்காக வரியினை விதிப்பதற்கும், சேகரிப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களை ஏற்பாடு செய்வதற்குமான ஒரு நியதிச்சட்டமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக:-*

*குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.*

*1. இந் நியதிச் சட்டம் மேல் மாகாணத்தின் "2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கனியவள வரி நியதிச் சட்டம்" என எடுத்துக்காட்டப்படுவதுடன், மேல் மாகாணத்தில் ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.*

பாகம் I

**கனியவள வரியினை விதித்தல்**

கனியவள வரியை விதித்தல்.

2. 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க கனியவள பெற்றோலிய பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் மாகாணத்தில் அமைந்துள்ள காணி ஒன்றில் இருந்து "கனியவள பொருட்கள்" பெறும், அகற்றும் உரிமைக்காக மாகாணத்தினுள் வியாபாரத்தினை மேற்கொண்டு செல்லும் ஒவ்வொரு நபரிடம் இருந்தும் இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் உள்ளிட்ட தவணை தொடக்கமும் அதன் பின்னர் ஆரம்பமாகும் ஒவ்வொரு தவணைக்காகவும் (இதனகத்துப்பின் கனியவள எனக் குறிப்பிடப்படும்) அவ்வியாபாரத்திற்காக அந் நபரினது மொத்த விற்பனை வரி தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்படும் வீதத்திற்கு இணங்க கணக்கிடப்பட்ட வரி ஒன்று பாராளுமன்றத்தினால் அமுல்படுத்தப்பட்ட சட்டத்தின் மூலமாக ஏதாவது உரிய வரையறை ஒன்று மற்றும் விலக்களிக்கப்படுவதன் கீழும் இந்நியதிச் சட்டத்தின் எற்பாடுகளுக்கு இணங்க அறவிடப்பட வேண்டும்.

ஏதாவது நபர் ஒருவர் கனியவள வரியை எச்சந்தர்ப் பத்தில் செலுத்த வேண்டும் என்பது.

3. (1) இந்நியதிச்சட்டத்தின் விடயங்களுக்காக, "வியாபாரம்" என்பது, கனியவளப் பொருட்களைப் பெறும், அகற்றும் உரிமையை நடைமுறைப்படுத்தி பெற்றுக்கொள்ளும் கனியவளங்களை மொத்தமாகவோ அல்லது/அத்துடன் சில்லறையாகவோ விற்றல் என்ற கருத்தாகும்.

(2) மாகாணத்தினுள் ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொண்டு செல்லப்படும் வியாபாரம் ஒன்று தொடர்பாக ஒவ்வொரு தவணைகளுக்குமாக கனியவள வரி அந்நபரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும்.

(3) ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொண்டு செல்லப்படும் வியாபாரம் ஒன்று தொடர்பாக அந்நபரிடம் இருந்து கனியவள வரி ஒன்றை அறவிடப்பட வேண்டிய வேளையில் அத்துடன் அவ்வியாபாரத்தின் உரிமை கைமாற்றப்பட்டுள்ள வேளையிலும் , (1) உப வாசகத்தின் கீழ் காணப்படும் ஏற்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது அவ்வியாபாரத்தின் புதிய உரிமையாளர் உரிமையை மாற்றுவதற்கு முன்னர் அந்த வியாபாரத்தின் உரிமையாளர் இருக்கின்றார் எனக் கருதி புதிய உரிமையாளரிடம் இருந்து கனியவள வரி அறவிடப்பட வேண்டும்.

பாகம் II

**வரி விலக்களித்தல்**

4. (1) மாகாணத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில், அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் கட்டளை ஒன்றின்மூலம், ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொண்டு செல்லப்படும் ஏதாவது வியாபாரம் ஒன்றுக்கு அல்லது வரையறுத்துக் கூறப்படும் ஏதாவது வியாபாரம் ஒன்றுக்கு வியாபாரம் கனியவள வரியை விலக்களிக்கலாம்.

(2) (1) முதலாவது உபவாசகத்தின்கீழ் வெளியிடப்படும் ஒவ்வொரு கட்டளையும், வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்தோ அல்லது அக்கட்டளையில் குறித்துக் காட்டப்படக்கூடிய பின்னரான தினம் ஒன்றில் இருந்தோ நடைமுறைக்கு வரவேண்டியதுடன், அக்கட்டளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து 3 மாத கால எல்லையினுள் அல்லது அக்காலத்தினுள் மாகாண சபைக் கூட்டம் ஒன்று நடாத்தப்படாதவிடத்து, அக்கால எல்லை முடிவடைந்த பின்னர் நடைபெறும் மாகாண சபையின் முதலாவது கூட்டத்தில் அல்லது அக்கட்டளையை அங்கீகரிக்குமாறான பிரேரணை ஒன்றின் மூலம் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) மாகாண சபையினால் அக்கட்டளையை அங்கீகரிப்பது நிராகரிக்கப்படும் போது நிராகரிக்கும் நாள் வரை அக்கட்டளையின் செல்லுபடியாகும் தன்மைக்கு பாதிப்பு ஒன்று இல்லாதபடி நிராகரிக்கப்பட்ட தினத்தில் இருந்து செல்லுபடியற்றதாகக் கருதப்பட வேண்டியதுடன் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட தினமே அக்கட்டளை நிராகரிக்கப்பட்ட தினமாகக் கருதப்பட வேண்டும். அக்கட்டளை ஏதாவது தினம் ஒன்றில் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படுவதாவது அத்தினத்தில் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

பாகம் III

**மொத்தப் புரள்வு**

மொத்தப் புரள்வு.

5. இந்த நியதிச் சட்டங்களின் விடயங்களுக்காக -

(1) மொத்த மற்றும் சில்லறை வியாபாரங்களுக்கு உரியதாக "மொத்த புரள்வு" என்பது ஏதாவது வியாபாரம் ஒன்றை மேற்கொண்டு செல்லும்போது உள்ளடக்கப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களிலும் உண்மையாகக் கிடைக்கப்பெற்ற, கிடைக்கப்பெறாத, கிடைக்கவேண்டிய நிதியாகும் :-

(அ) கீழே காணப்படும் நிதியினைக் கழித்த பின்னர் –

(1) அந்நிதி உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு மூலதனச் சொத்தொன்றினையும் அகற்றிய பின் கிடைக்கப்பெறும் மொத்த நிதியும் ;

(2) முன்னர் உள்ள ஏதாவது தவணை ஒன்றில் அவ் வியாபாரத்தின் மொத்த புரள்வில் உள்ளடக்கப்பட்டு இருந்தால் அது தொடர்பான கனியவள வரி செலுத்தப்பட்டு ஏதாவது நிதி ஒன்று உரிய தவணையினுள் அறவிடப்பட முடியா கடனாக உறுதிப்படுத்தப்பட்டு இருந்தால் அந்நிதி ; அத்துடன்

(ஆ) முன்னரான தவணை ஒன்றில் கைவிடப்பட்டதும், கைவிடப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதுமான ஏதாவது அறவிட முடியாக் கடன் ஒன்றுக்காக அந்த உரிய தவணை ஒன்றினுள் கிடைக்கப்பெற்ற ஏதாவது நிதி ஒன்றைச் சேர்த்த பின்னர் அந் நிதி

என்ற கருத்தாகும்.

பாகம் IV

**அறிக்கை**

6. (1) மாகாணத்தினுள் ஏதாவது வியாபாரம் ஒன்றை மேற்கொண்டு செல்லும் ஒவ்வொரு நபர் ஒருவரினாலும், ஒவ்வொரு தவணையிலும் அந்த வியாபாரத்தின் மொத்த விற்பனவைக் காட்டும் அறிக்கை ஒன்று அந்த ஒவ்வொரு தவணை முடிவடைந்த பின், பதினைந்து நாட்கள் நிறைவடைய முன் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு அறிக்கையும் உரிய படிவத்தின்மூலம் இடம்பெற வேண்டியதுடன் அப்படிவத்தில் உள்ளடக்கப்படவேண்டியது என பணிக்கப்பட்ட எல்லாத் தகவல்களும் அப்படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். அறிக்கையும் தகவல்களும்.

(2) மதிப்பீட்டாளர் ஒருவரின் தீர்ப்பின்படி கனியவள வரியினை அறவிடக்கூடிய ஏதாவது ஆள் ஒருவருக்கு அனுப்பப்படும் எழுத்துமூலமான அறிவிப்பு ஒன்றின்மூலம் அவ்வறிவிப்பில் உள்ளவற்றை உரிய காலத்தினுள் தேவையாள விவரங்கள் உள்ளிட்ட அறிக்கை ஒன்றை வழங்குமாறு கட்டளையிடலாம்.

(3) ஏதாவது நபர் ஒருவரினால் மேற்கொண்டு செல்லப்படும் ஏதாவது வியாபாரம் ஒன்றின் மொத்த விற்பனவு தொடர்பான முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விடயங்களுக்காக மதிப்பீட்டாளர் ஒருவரினால் அந்நபருக்கு அனுப்பப்படும்.

எழுத்துமூலமான அறிவிப்பு ஒன்றின் மூலம் –

(அ) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லையினுள் அதில் குறிப்பிடப்படும் ஏதாவது புத்தகம் ஒன்று, கணக்கு, வியாபார பட்டியல், ஆவணங்கள், உறுதிச்சீட்டுக்கள், காசோலைகள், கொடுப்பனவு துண்டு, கணக்காய்வு அறிக்கைகள், பரிசோதனை அறிக்கைகள் அல்லது அவ் நபரினது சொத்தில் உள்ள அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஏதாவது ஆவணம் ஒன்றைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக சமர்ப்பிக்கும்படியும் அத்துடன் மதிப்பீட்டாளருக்கு அனுப்புமாறும் ;

(ஆ) அவ்வியாபாரம் தொடர்பான புரள்வு சம்பந்தமாகப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது இடம் ஒன்றுக்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது நாளிலும் நேரத்திலும் அந்த நபரை அல்லது அதிகாரம் பெற்ற முகவர் ஒருவரை

வருகை தருமாறு கட்டளையிட முடியும்.

பாகம் V

**வரி செலுத்துதல்**

7. (1) ஏதாவது தவணை ஒன்றுக்கு உரிய கனியவள வரி அத்தவணை முடிவடைந்த அடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் திகதி நிறைவடைய முன்னர் செலுத்தப்படவேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத ஏதாவது வரிக் கொடுப்பனவு தவணை தவறிய வரி ஒன்றாகக் கருதப்பட வேண்டும். அந்த வரி ஏதாவது நபர் ஒருவரினால் செலுத்தப்படவேண்டியதாயின் அந்நபரினால் அல்லது ஒருவரை விட அதிகமானவர்களினால் அல்லது பங்குடமை வரி செலுத்துதல்.

வியாபாரம் ஒன்றினால் செலுத்தப்படவேண்டிய வேளையில் ஒரு பங்குடமை வியாபாரத்தினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பங்குடமை வியாபாரத்தினால் அல்லது கூட்டுத்தாபனமாக்கப்பட்ட நிறுவனத்தினால் செலுத்தப்படவேண்டிய வேளையில் அத்தாபனத்தின் பணிப்பாளர் பதவியினை வகிக்கும் அல்லது வகித்த பணிப்பாளர்களினால் இணைந்து அல்லது வேறாக இந்நியதிச்சட்டத்தின் விடயத்திற்காக கொடுப்பனவு தவணை தவறப்பட்டுள்ளது எனக் கருதப்பட வேண்டும்.

கொடுப்பனவு தவணை தவறுவதற்கு உரிய தண்டனை.

8. (1) ஏதாவது கனியவள வரி ஒன்றைச் செலுத்துவது தவணை தவறும் சந்தர்ப்பத்தில் தவணை தவறியவரினால் தவணை தவறியுள்ள அந்த வரிக்கு மேலதிகமாகத் தண்டம் ஒன்றாக -

(அ) கொடுப்பனவு தவணை தவறிய நிதியில் நூற்றுக்குப் பத்து வீதத்திற்கு சமமான நிதி ஒன்று ; மற்றும்

(ஆ) கொடுப்பனவு தவணை தவறிய ஏதாவது நிதி ஒன்று அவ்வரி ஏதாவது மாதம் ஒன்றினுள் செலுத்துவது தவணை தவறுவது ஆரம்பமாகி இருந்தால் அம்மாதத்திற்குப் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்படாத சந்தர்ப்பம் ஒன்றில் கொடுப்பனவு தவணை தவறிய கால எல்லை ஒவ்வொரு மாதத்தினதும் அல்லது அதன் ஒவ்வொரு பகுதியினதும் பதினைந்து நாட்கள் நிறைவுபெறும் ஒவ்வொரு கால எல்லைக்காகவும், கொடுப்பனவு தவணை தவறி உள்ள நிதியில் நூற்றுக்கு இரண்டு விகிதத்திற்கு சமமான மேலதிக நிதி ஒன்று

செலுத்தப்பட வேண்டும்.

எவ்வாறான போதும் இவ் உப பிரிவின் கீழ் தண்டம் ஒன்றாகச் செலுத்தப்படவேண்டிய மொத்த நிதிக் கொடுப்பனவு தவணை தவறி உள்ள வரியில் 50% ஐ எந்த சந்தர்ப்பம் ஒன்றிலும் மீறக் கூடாததுடன் கொடுப்பனவு தவணை தவறி உள்ள ஏதாவது விசேட காரணத்தினால் அந் நிதியை கைவிடுதல் அல்லது குறைத்தல் நீதியானதும், நியாயமானதும் என ஆணையாளர் திருப்திப்படுமிடத்து அவ்வாறான நிதி ஒன்றைக் கைவிட அல்லது குறைக்க இயலும்.

## பாகம் VI

## நிதி நியதிச்சட்டத்தின் சில அத்தியாயங்களின் ஏற்பாடுகள் உரியவை என

1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் நிதி நியதிச் சட்டத்தின் சில ஏற்பாடு உரியதாக வேண்டும் என்பது.

9. மேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதி நியதிச்சட்டத்தின் V ஆவது அத்தியாயத்தின் 10 (4), (5), (6), (7), (8), (9), (10) உப பிரிவுகளின் ஏற்பாடுகளும், VII, VIII, IX, XXIII, XXIV, XXV, XXVI, XXVII, XXXII, XXXIII, XXXIV ஆகிய அத்தியாயங்களினதும் ஏற்பாடுகள் முறையே அறிக்கைகள், மதிப்பீடுகளின் சரியான தன்மை அத்துடன் தவறான அறிக்கைகளுக்குரிய தண்டனை, விசேட சந்தர்ப்பம், தண்டனையும் தவறும், பொது விடயம், மேன்முறையீடு, மீளாய்வு சபைக்கு மேன்முறையீடு செய்தல், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேற்கொள்ளப்படும் மனு, வரியினை அறவிட்டுக்கொள்ளல், பொது விடயம், நடைமுறைப்படுத்துதல், பொருள் கொள்ளல் போன்ற ஏற்பாடுகள் தேவையான மாற்றங்களுடன் இந்நியதிச் சட்டத்தின் கீழ் முறையே அறிக்கைகள், மதிப்பீடுகளின் சரியான தன்மை அத்துடன் தவறான அறிக்கைகளுக்குரிய தண்டனை,விசேட சந்தர்ப்பம், தண்டனையும் தவறும், பொது விடயம், மேன்முறையீடு, மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்தல், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேற்கொள்ளப்படும் மனு, வரியினை அறவிட்டுக்கொள்ளல், பொது விடயம், நடைமுறைப்படுத்துதல், பொருள்கொள்ளல் தொடர்பாகவும் உரியதாக வேண்டும்.

## பாகம் VII

## பொருள் கொள்ளல்

பொருள் கொள்ளல்.

10. சொற்கள் தொடர்பாக பொருள்கொள்ளல் தேவைப்பட்டால் ஒழிய இந்நியதிச் சட்டத்தின்

"அமைச்சர்" என்பது, நிதி விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள மாகாண அமைச்சரவையின் அமைச்சரும்;

"அனுமதிப்பத்திரம்" என்பது, 1992 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க கனியவள பொருட்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்று எனவும் ;

"தவணை" என்பது, ஏதாவது வருடம் ஒன்றின் சனவரி, ஏப்பிறல், யூலை அத்துடன் ஒற்றோபர் போன்ற மாதங்களின் 1 ஆந் திகதி ஆரம்பமாகும் 03 மாதங்களுக்கு உரிய காலம் எனவும் ;

இந்த நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளுக்கு உரியதாக "தவணை" என்பது அத்தினம் உள்ளடங்கலாக ஏதாவது தவணை ஒன்றில் அத்தினத்தில் இருந்து அத்தவணை நிறைவடையும் மாதத்தின் இறுதி நாள் வரையுள்ள காலம் என்றும் ;

"கனியவளப் பொருட்கள்" என்பது திண்ம, திரவ அல்லது வாயுவாக பூமியில் உள் இருந்து அல்லது நிலத்திற்கு அடியில் இருந்து அகழ்ந்து எடுக்கக்கூடிய இயற்கையாகவே காணப்படும் கனியவளப் பொருட்கள் என்றும், அவ்வாறான கனியவள திரவியங்கள் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட அவ் கனியவளப் பொருட்களில் ஏதாவது உற்பத்தி ஒன்று என்ற கருத்தாகுவதுடன் அதற்குள் மரம் மற்றும் பலகைகள் உள்ளடக்கப்படுவதுடன், ஹைதரோ காபன் உள்ளடங்காது ;

"கனியங்களைப் பெறுதல்" என்பது, கனியப் பொருட்கள் ஏதாவதை மதிப்பிடும் அல்லது பெற்றுக்கொள்ளும் விடயத்திற்காக பூமியினுள் அல்லது வெளியில் இருந்து பெறுதல்

என்ற கருத்தாகும்.

11. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கில பதங்களுக்கிடையே ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள பதமே அிகாரமுடையதாகும். ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே அதிகாரம் பெற வேண்டும்.

**(அட்டவணை 3 (1) உப வாசகம்)**

மாகாணத்தினுள் கனியவள பொருட்களை அகழ்தல், அகற்றிக்கொள்ளும் உரிமை அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்தும் போது எடுக்கப்பட்ட கனியவளப் பொருட்களின் தேறிய மொத்த புரள்வின் பெறுமதியின் கீழ். வரி விகிதாசாரம் நூற்றுக்கு 0.5.

6-729

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

2- PG001361